


**02.04.2025**

**தலைப்பு செய்திகள்**

**1. நாட்டின் அறிவுசார் மறுமலர்ச்சிக்கு தேசிய கல்விக் கொள்கை** வழிகோலுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

**2. வக்.்.ப் சட்டத்திருத்த மசோதா 2025 மீதான விவாதம்** மக்களவையில் இன்று தொடங்கியுள்ளது.

3. **தேச பக்தி உணர்விற்கு இளையோர் முன்னுரிமை வழங்க** மத்திய இளைஞர்நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

**4. கச்சத்தீவை திரும்ப பெற உடனடி நடவடிக்கைகளை மத்திய** அரசு மேற்கொள்ள, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் முன்மொழிந்த தனித்தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக இன்று நிறைவேறியது.

5. **வேளாண் துறை மானிய கோரிக்கை மீதான கொள்கை விளக்க குறிப்பை அமைச்சர் திரு. MRK** பன்னீர் செல்வம் இன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**தேசிய கல்விக்கொள்கை**

**நாட்டின் அறிவுசார் மறுமலர்ச்சிக்கு தேசிய கல்விக்கொள்கை** வழிகோலுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

தேசிய கல்விக்கொள்கை தொடர்பாக ஊடகத்தில் வெளியான மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திர பிரதானின் கட்டுரையை பகிர்ந்துள்ள பிரதமர், தற்சார்புடைய உலகளாவிய போட்டிக்கு ஏதுவான படைப்பாற்றல் திறன்மிகு கொள்கைகளை கொண்ட இக்கல்விக்கொள்கை அமைந்துள்ளதாக பாராட்டியுள்ளார்.

வெறும் சீர்த்திருத்தங்கள் மட்டுமல்லாமல் கடந்த பல்வேறு ஆண்டுகளில் நாட்டின் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்களையும் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

❖❖❖❖❖❖

**பிரதமர்**

**பிரதமர் திரு.நரேந்திரமோடி 4 நாள் அரசுமுறை** பயணமாக நாளை தாய்லாந்து மற்றும் இலங்கை நாடுகளுக்கு செல்கிறார்.

தாய்லாந்து தலைநகர் பேங்காக்கில் நாளைமறுநாள் நடைபெறும் 6-வது பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் பிரதமர் பங்கேற்கிறார்

இந்தியா, தாய்லாந்து, பங்களாதேஷ், பூட்டான், மியான்மர், நேபாளம், இலங்கை உள்ளிட்ட பிம்ஸ்டெக் நாடுகள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றன.

வளமான, வலுவான, வெளிப்படையான பிம்ஸ்டெக் என்ற தலைப்பில் நடைபெறும் இம்மாநாடு பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை இலக்காக கொண்டுள்ளது.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக தாய்லாந்து பிரதமர் Paetongtarn Shinawatra உடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் மேற்கொள்கிறார்.

தாய்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் வரும் 4-ம் தேதி மாலை இலங்கை செல்கிறார்.

**இதனிடையே பிரதமர் திரு. நரேந்திரமோடி** தலைமையில் புதுதில்லியில் மத்திய அமைச்சரவை கூட்டம் இன்று நடைபெறுகிறது

❖❖❖❖❖❖

**வக்ஃப் சட்டத்திருத்த மசோதா**

**நாடாளுமன்ற கூட்டுக்குழு பரிந்துரைத்த** வக்ஃப் சட்டத்திருத்த மசோதா 2025 மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

இம்மசோதாவை தாக்கல் செய்து பேசிய மத்திய சிறுபான்மையின விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு, இஸ்லாமியர்களின் மத நடைமுறைகளுக்கு இம்மசோதாவால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று குறிப்பிட்டார்.

வக்ஃப் வாரிய சொத்துக்கள் கையாளப் படுவதற்கான வழிமுறைகளை மட்டுமே இம்மசோதா ஆவன செய்யும் என்றார்.

வக்ஃப் வாரியங்கள் பாதுகாப்பான உள்ளடக்கங்களோடு செயல்படுவதை மத்திய அரசு உறுதி செய்யும் என்று கூறியஅவர், பள்ளிவாசல் மேலாண்மையில் மத்திய அரசு தலையிடாது என்றும் குறிப்பிட்டார்.

தற்போதைய மசோதாவின் படி வக்ஃப் வாரியங்களில் பல்வேறு இஸ்லாமிய பிரதிநிதிகள் பெண்கள் மற்றும் இஸ்லாமியர் அல்லாத பிறர் இடம்பெற வகை செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இம்மசோதா குறித்து எதிர்கட்சிகள் மக்களை தவறாக வழிநடத்துவதாக அமைச்சர் குற்றம் சாட்டினார்.

2013-ம் ஆண்டு ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் வக்ஃப் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டதாகவும், காங்கிரஸ் ஆட்சியின் போது டெல்லியில் முக்கிய இடங்களில் அமைந்திருந்த 123 சொத்துக்கள் டெல்லி வக்ஃப் வாரியத்திற்கு மாற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற கூட்டுக்குழுவும், மத்திய அரசும் பல்வேறு சமூக அமைப்புகளுடன் விரிவான விவாதங்களை மேற்கொண்ட பின்னரே உரிய சட்ட நெறிமுறைகளை வகுத்துள்ளதாகவும் திரு. கிரண் ரிஜுஜு எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**தேச பக்தி உணர்விற்கு முன்னுரிமை வழங்கி** இளையோர் செயல்பட மத்திய இளைஞர்நலன் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் வளர்ச்சியடைந்த இந்தியா இளைஞர் நாடாளுமன்றம் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றியஅவர், இந்தியா வளர்ச்சிபெற்ற நாடாக மேம்பட இளையோருக்கு பெரும் பங்குள்ளதாக எடுத்துரைத்தார்.

நாட்டின் 300 மாவட்டங்களிலிருந்து தேர்வு செய்யப்பட்ட இளையோர், இளைஞர் பாராளுமன்றத்தில் பங்கேற்று, ஜனநாயக வழிமுறைகளை புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு கிடைக்க வகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற கருப்பொருளுடன் நடைபெறும் இந்த 2 நாள் மாநாட்டில் அரசியல், பொது கொள்கைகள் உள்ளிட்டவை குறித்து இளையோர் அறிந்து தேச கட்டமைப்பிற்காக செயலாற்றும் வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

**24-வது தேசிய மாநாடு**

**மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 24-வது தேசிய** மாநாடு மதுரையில் இன்று நடைபெறுகிறது.

அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. பிரகாஷ்காரத், கேரள முதலமைச்சர் திரு.பிணராயி விஜயன் மற்றும் நாடுமுழுவதிலுமிருந்து பிரதிநிதிகள், தொண்டர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

**தனிதீர்மானம் - முதலமைச்சர்**

**கச்சத்தீவை திரும்ப பெறுவதற்காக இந்திய** - இலங்கை ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்து, அனைத்து நடவடிக்கைகளையும் மத்தியஅரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் முன்மொழிந்த அரசினர் தனித்தீர்மானம் இன்று சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டப்பேரவையில் இன்று கேள்வி நேரம் முடிந்ததும் இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும், இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை போக்கிடவும், கச்சத்தீவை மீண்டும் பெறுவதே நிரந்தர தீர்வாக அமையும் என்று குறிப்பிட்டார்.

1974-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் படி கச்சத்தீவு உரிமையை இலங்கை அரசுக்கு மத்திய அரசு வழங்கியபோதே, அப்போதைய முதலமைச்சர் மு.கருணாநிதி அதை வன்மையாக எதிர்த்ததை முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்த பிரச்சனைக்கு நிரந்தர தீர்வுகாண பிரதமருக்கும், மத்திய அமைச்சர்களுக்கும் இதுவரை 74 கடிதங்களை தாம் எழுதியுள்ளதாகவும், பிரதமரிடம் நேரில் தாம் வலியுறுத்தியதாகவும் குறிப்பிட்டார்.

அரசுமுறை பயணமாக இலங்கை செல்லும் பிரதமர் இலங்கை அரசுடன் பேசி அந்நாட்டு சிறையில் வாடும் நமது மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்து மீட்டு கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளார்.

**..வாய்ஸ் ..**

அனைத்து கட்சியினரும் இந்த தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று முதலமைச்சர் கோரிக்கை வைத்தார். இதனையடுத்து இந்த தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

❖❖❖❖❖❖

**கொள்கை விளக்க குறிப்பு**

தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தியை அதிகரிக்கவும், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் லாபகரமாக இயங்கவும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மாநில வேளாண் அமைச்சர் திரு. **MRK.** பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான கொள்கை விளக்க குறிப்பில் இதனை தெரிவித்த அவர் மாநிலத்தில் கரும்பு விலை மெட்ரிக் டன் ஒன்றுக்கு மூன்றாயிரத்து 500 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும் என்றார்.

இதனிடையே மீன்வளத்துறை கொள்கை விளக்க குறிப்பில் நெல்லையில் ஒரு வேளாண் அறிவியல் நிலையம், மீன்வள தொழில்நுட்ப கல்லூரி அமைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖

**கவன ஈர்ப்பு தீர்மானம் - எ.வ.வேலு**

**மதுரவாயல் துறைமுக மேம்பால பணிகளை** விரைந்து முடிப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எ.வ.வேலு தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பான கவனஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்த அமைச்சர், மதுரவாயல் துறைமுக மேம்பாலம் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தை சார்ந்ததாகும் என குறிப்பிட்டார்.

இந்த திட்டப்பணிகள் 4 தொகுப்புகளாக நடைபெற்று வருவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் இப்பணிகளை விரைந்து முடிக்க மாநில அரசு வலியுறுத்தியிருப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖

**சட்டப்பேரவை :**

**தமிழ்நாட்டில் இந்த ஆண்டு புதிதாக நடைமுறை படுத்தப்படும் 19 கூட்டுகுடிநீர் திட்டங்களுக்கு** ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்வதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அறிவித்தார்.

சட்டப்பேரயையில் இன்று கேள்வி நேரத்தின் போது பேசியஅவர், நிதி கிடைத்ததும் இந்த திட்டங்களின் பணிகள் தொடங்கப்படும் என்றார்.

**நாகர்கோவில்** மாநகராட்சி பகுதியில் தற்போது 27 வார்டுகளில் நாள் ஒன்றுக்கு தலா 46 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப் படுவதாகவும், இம்மாநகராட்சிக்கான திட்டப்பணிகள் முடிந்ததும் அடுத்தமாதம் 30-ம் தேதிமுதல் சீரான குடிநீர் விநியோகிக்கப்படும் என்றும கூறினார்.

கோவை மாவட்ட குடிநீர் பிரச்சனையை தீர்க்க மாநில அரசு 2 நாட்களில் அதிகாரிகளை அனுப்பி ஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

சூயஸ் தனியார் நிறுவனத்திடம் பேசி கோவை மாவட்டத்திற்கு தடையற்ற குடிநீர் விநியோகிக்கப்படும் என்றார்.

தாமிரபரணி ஆற்று நீராதாரத்தை கருத்தில் கொண்டு 896 கோடி ரூபாய் செலவில் புதிய கூட்டுகுடிநீர் திட்டம் தொடங்கப்படவிருப்பதாகவும், இதன்மூலம் நெல்லை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்றும் கூறினார்.

ஆலங்குளம் தொகுதிக்கு உட்பட்ட சுமார் 172 கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டப்பணிகள் 46 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்று வருவதாகவும், இந்த தொகுதிக்கு உட்பட்ட கீழப்பாவூர், பாப்பாகுடி, கடையம் ஆகிய ஒன்றிய பகுதிகளுக்கும் குடிநீர் வழங்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்

..

**நெய்வேலி தொகுதியில் 37 கோடி ரூபாய் செலவில்** நீர்வளத்துறையின் சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருவதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

இந்த தொகுதிக்கு உட்பட்ட திருவாமூர் ஊராட்சி பகுதியில் உள்ள சமத்துவபுரத்தில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்டப்படும் என்றும், அப்பகுதியில் உள்ள காமாட்சி பேட்டை எனும் இடத்தில் தடுப்பணையும் கட்டப்படும் என்றார்.

..

**எஸ்.எஸ்.சிவசங்கர்**

**சென்னை விமான நிலையத்திலிருந்தும்,** கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்தும், கிளாம்பாக்கம் புதிய பேருந்து நிலையத்திற்கு போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு மாணவகள் சிரமமின்றி செல்வதற்காக போதிய அளவிற்கு பேருந்துகள் இயக்கப்படுவதாக தெரிவித்த அமைச்சர், புதிய மினி பேருந்துகள் வரும் போது அப்பகுதிகளுக்கு கூடுதலான பேருந்து வசதிகள் செய்து தரப்படும் எனவும் அவர் கூறினார்.

..

**மா.சுப்ரமணியன்**

**500 துணை சுகாதார நிலையங்கள், 50 ஆரம்ப** சுகாதார நிலையங்கள், 100 துணை ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருப்பதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்தார்

மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் இதற்கான பணிகள் தொடங்கப்படும் என்று அவர் கூறினார்.

மாநிலத்தில் உள்ள சுமார் 8 ஆயிரத்து 700 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 2 ஆயிரத்து 600 துணை சுகாதார நிலையங்கள் இவற்றில் 3 ஆயிரத்திற்கும் மேல் பழுதடைந்திருப்பதாகவும், அதை சீர்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

நடப்பாண்டில் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டப்படும் என்றும் அவர் கூறினார்.

சோழவந்தான் நகரில் உள்ள அரசு மருத்துவமனைக்கு மூன்றரை கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டப்படும் என்றும், போதிய அடிப்படை வசதிகள் செய்துதரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**உலக ஆட்டிசம் தினம்**

**உலக ஆட்டிசம் தினத்தை முன்னிட்டு திருச்சி** மாவட்டத்தில் இன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் குழந்தைகளின் வாழ்வின் தரத்தையும், வாழ்வாதாரத்தை மேம்படுத்த இயன்ற முயற்சிகளை செய்வோம் என்ற உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் தலைமையில் ஏற்கப்பட்டது.

ஆட்டிசம் பாதிப்பை அண்மையிலேயே கண்டறிந்தால் அதனை சரிசெய்யலாம் என்று திருச்சி டால்.ஃ.பின் சிறப்பு பள்ளி நிறுவனர் திருமதி. பிரவீனா கார்மல் இந்நிகழ்ச்சியில் தெரிவித்தார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**இலங்கை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ராமேஸ்வர** மீனவர்கள் 13 பேர் விமானம் மூலம் இலங்கையிலிருந்து சென்னை வந்தடைந்தனர்.

இம்மீனவர்களை தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள் அரசு வாகனங்கள் மூலம் ராமேஸ்வரம் அனுப்பிவைத்தனர்.

❖❖❖❖❖❖

**திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அருள்மிகு** ராஜகோபால சுவாமி திருக்கோவிலில் வெண்ணைத்தாழி திருவிழா இன்று வெகுவிமரிசையாக தொடங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖

**வானிலை**

வளிமண்டல சுழற்சி காரணமாக நீலகிரி கோவை திருப்பூர் ஈரோடு தேனி திண்டுக்கல் மதுரை விருதுநகர் சிவகங்கை தென்காசி கன்னியாகுமரி திருநெல்வேலி மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

**துப்பாக்கி சுடுதல்**

**அர்ஜெண்டினாவில் நாளை தொடங்கும் உலக** கோப்பை துப்பாக்கி சுடும் போட்டிகளில் மனுபாக்கர் தலைமையில் 43 இந்திய அணியினர் பங்கேற்கின்றனர்.

45 நாடுகளிலிருந்து 400-க்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் ரை.ஃ.பில், பிஸ்டல், ஷாட்கன், பிரிவுகளில் பங்கேற்கின்றனர்.

❖❖❖❖❖❖